MINISTRY OF MANPOWER

# CONNECT with ACE

## குடிபெயர்ந்த ஊழியர்களுக்கான மாதாந்திர மின் செய்திமடல்




மே 2022

### இந்தப் பதிப்பில்:

முக்கிய அறிவிப்புகள்

வெப்பத் தாக்கத்திலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ள உதவிக் குறிப்புகள்

ஹரி ராயா ஐடில்பித்ரி பெருநாள் மற்றும் விசாகத் தினக் கொண்டாட்டங்கள்



# முக்கிய அறிவிப்புகள்





## ஏஸ் குழுவின் சமூக ஊடக ஒளிவழிகளின் துவக்கம்

- செய்திகள் மற்றும் அண்மைய புதுப்பிப்புகளுக்கு எங்கள் ஃபேஸ்புக் பக்கத்தையும் டிக்டொக் கணக்கையும் லைக் செய்து பின்தொடரவும்!

go.gov.sg/ace-facebook go.gov.sg/ace-tiktok

## லிட்டில் இந்தியாவில் அமைந்திருக்கும் பள்ளிவாசலில் குடிபெயர்ந்த ஊழியர்களுக்கான சட்ட மருந்தகம் துவங்கப்பட்டது (MWLC).

- இந்தச் சட்ட மருந்தகம் எல்லா குடிபெயர்ந்த ஊழியர்களுக்கும் சேவை வழங்கும். அதோடு மொழிபெயர்ப்பு சேவைகளும் வழங்கப்படும்.
- சம்பளம் குறித்த தகராறுகள், வேலையிடத்தில் ஏற்படும் காயங்கள் ஆகியவற்றிற்கு உங்களுக்குச் சட்ட ஆலோசனை தேவைப்பட்டால், ஒவ்வொரு மாதமும் 2-வது மற்றும் 4-வது ஞாயிற்றுக்கிழமைகளில் நீங்கள் இங்கு வரலாம் அல்லது http://tinyurl.com/RegisterMWLC என்ற இணையத்தளத்தில் ஆலோசனைக்கு விண்ணப்பிக்கலாம்




## POSB ஜாலி கூடிய விரைவில் இனிமேல் கிடைக்காது

தடையற்ற வங்கி சேவையைத் தொடர்ந்து அனுபவிக்க, கூடுமான விரைவில் POSB டிஜிபெங்க் சேவைக்கு மாறவும். POSB டிஜிபெங்க் சேவையை எவ்வாறு பதிவிறக்கம் செய்து, அதற்குப் பதிவு செய்து மற்றும் பயன்படுத்துவது பற்றிய கூடுதல் தகவலுக்குப் பின்வரும் பக்கங்களைப் பார்க்கவும்:

- ஆங்கிலம்: https://go.posb.com.sg/rg
- தமிழ்: https://go.posb.com.sg/rg-tr
- பெங்காலி: https://go.posb.com.sg/rg-bn
- மாண்டரின்: https://go.posb.com.sg/rg-zh
- தகலொக்: https://go.posb.com.sg/rg-tl
- பர்மிய மொழி: https://go.posb.com.sg/rg-my
- இந்தோனேசிய மொழி: https://go.posb.com.sg/rg-ms

# வெப்பத் தாக்கத்திலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்!





கொளுத்தும் வெயிலின் கீழ் நீண்ட நேரம் வேலை செய்வதால் நீங்கள் வெப்பத்தின் தாக்கத்திற்கு உள்ளாகலாம்.

வெப்பத் தாக்கத்தைத் தடுக்க சில உதவி குறிப்புகள் இதோ.



நிறைய தண்ணீர் குடிக்கவும். ஒவ்வொரு 15-20 நிமிடங்களுக்குக் குறைந்தது ஒரு கோப்பை (250மிலி) தண்ணீர் குடிக்கவும். தாகத்தைத் தணிக்கத் தேவைப்படும் போதெல்லாம் தண்ணீர் குடிக்க வேண்டும்.



சக ஊழியர் ஒருவருடன் சேர்ந்து வேலை செய்யவும். தலைவலி, குமட்டல் மற்றும் மயக்கம் ஏற்படுதல் போன்ற வெப்பத் தாக்கத்திற்கான ஆரம்ப அறிகுறிகளைக் கவனிக்கவும்.



வெளியில் இருக்கும்போது தளர்வான மற்றும் வெளிர் நிற ஆடைகளை அணியவும். முடிந்தவரை நிழலின் கீழ் வேலை செய்யவும்.

**உங்களுக்கு உடல் நலமில்லை எனில், உடனடியாக உங்கள் மேற்பார்வையாளரிடம் தெரிவித்துவிட்டு ஒரு மருத்துவரைச் சென்று காணவும்.**

## குடிபெயர்ந்த ஊழியர்களுக்கு ஒரு செய்தி

இவர் சோஹால் மாஸி, பங்களாதேஷ் நாட்டுலிருந்து இங்கு குடிபெயர்ந்த நமது ஊழியர் நண்பர். பெரும்பாலான நாள்களில் இரவுநேர வேலை செய்து வந்த போதிலும், சோஹால் 6 மாதங்களுக்கு 24ஏஷியா அமைப்பிடம் கிராஃபிக் வடிவமைப்புக் கலையைக் கற்க நேரம் ஒதுக்கினார். அப்போது தொடங்கி, கிராஃபிக் வடிவமைப்புக் கலையில் மிகுந்த ஆர்வம் கொண்டார். தனது ஓய்வு நேரத்தில் சுவரொட்டிகளை உருவாக்கி வருகிறார்.

“எனக்குக் கிராஃபிக் வடிவமைப்பு மிகவும் பிடிக்கும். மென்மேலும் கற்றுக்கொண்டு முழுநேர நிபுணத்துவக் கிராஃபிக் வடிவமைப்பாளராக விரும்புகிறேன்,” என்றார் அவர்.



“சோஹால் வேகமாகவும் ஆர்வமாகவும் கற்றுக்கொள்பவர்,” என்று 24ஏஷியா அமைப்பின் நிறுவனர் நஸ்முல் கான் கூறினார். சோஹாலைப் போலவே ஒவ்வொருவரும் வளரவும் சிறப்பாகச் செய்யவும் அவர்களுக்குள் ஆற்றல் உள்ளது என்றும் அவர் நம்புகிறார். கடந்த 2.5 ஆண்டுகளில், 24ஏஷியா அமைப்பு 1000க்கும் மேற்பட்ட குடிபெயர்ந்த ஊழியர்களுக்கு 24 முறை இலவசப் பயிற்சிகளை நடத்தியுள்ளது. பயிற்சியின் மூலம் பயனடைந்த ஊழியர்களில் ஒருவரான சோஹால், வளங்களும் ஆதரவும் இங்கு எளிதில் கிடைப்பதால், குடிபெயர்ந்த ஊழியர்கள் புதிய திறன்களைக் கற்றுக்கொள்ள அவர்களுக்கு ஊக்கம் அளிக்க விரும்புகிறார்.

சோஹால் வடிவமைத்த சுவரொட்டிகள்



***சிங்கப்பூரில் உங்கள் வாழ்க்கையைப் பற்றி பகிர்ந்து கொள்ள சுவாரஸ்யமான கதை எதேனும் உள்ளதா? இந்த இணைப்பைக் கிளிக் செய்து அதனை எங்களுக்குத் தெரியப்படுத்தவும்***

# நிகழ்வின் சிறப்பம்சங்கள்





### துவாஸ் சவுத் ஆர்சியில் (டிஎஸ்ஆர்சி) ஹறி ராயா ஐடில்ஃபித்ரி நோன்பு பெருநாள் கொண்டாட்டங்கள்

3 மே 2022 அன்று, 7000க்கும் மேற்பட்ட குடிபெயர்ந்த ஊழியர்கள் டிஎஸ்ஆர்சியில் ஹறி ராயா ஐடில்பித்ரி நோன்பு பெருநாளைக் கொண்டாடினர். முஸ்லீம் பிரார்த்தனை தலைவர்கள் காலையில் ஈத் தொழுகையை நடத்தினர். குடிபெயர்ந்த ஊழியர்களுக்குச் சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வை ஏற்பாடு செய்த விருந்தினர் ஊழியர் அவுட்ரீச் கூட்டணிக்கு (AGWO) மிக்க நன்றி!

### கோவில் பயணம் விசாக தினக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெற்றது

சிங்கப்பூர் சிங்கள பௌத்த சங்கம் மற்றும் இந்து அறக்கட்டளை வாரியம் இணைந்து, மஹா கருணா பௌத்த சங்கம் கிளவோனில் 170க்கும் மேற்பட்ட குடிபெயர்ந்த ஊழியர்களுக்குப் பராமரிப்புப் பொட்டலங்கள் மற்றும் உணவுப் பொருட்களை வழங்கியது. அதே நாள் மாலையில், 37 குடிபெயர்ந்த ஊழியர்கள் ஸ்ரீலங்காராமாயா புத்தர் கோவிலுக்கு நேரடி நிகழ்ச்சிக்கும், இரவு உணவு மற்றும் சுற்றுலாவிற்கும் வரவழைக்கப்பட்டனர். இந் நிகழ்வு எமது குடிபெயர்ந்த ஊழியர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் மதிய சைவ உணவு மற்றும் அன்பளிப்பு பை வழங்கப்பட்டது.



இந் நிகழ்ச்சியை இணைந்து ஏற்பாடு செய்த சிங்கப்பூர் சிங்கள பௌத்த சங்கம், மகா கருணா பௌத்த சங்கம் மற்றும் இந்து அறக்கட்டளை வாரியம் ஆகியவற்றிற்கு நன்றி!

### சுங்காய் தெங்கா லாட்ஜில் (STL) தொழிலாளர் தின நிகழ்வு

சுங்காய் தெங்கா லாட்ஜில் நடந்த தொழிலாளர் தினக் கொண்டாட்டங்களில் ஏறக்குறைய 5000 குடிபெயர்ந்த ஊழியர்கள் கயிறு இழுத்தல், கை மல்யுத்தம் மற்றும் காற்பந்தாட்டப் போட்டி போன்றவற்றில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்விற்கு வழிவகை செய்த சுங்காய் தெங்கா லாட்ஜ் குழுவினருக்கு நன்றி!





**நீங்கள் பங்கேற்கக்கூடிய பல்வேறு நேரடி மற்றும் இணைய நடவடிக்கைகளைப் பற்றி மேலும் அறிய இங்கே காணப்படும் QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்!**

*அண்மைய செய்திகள் மற்றும் புதுப்பிப்புகளைப் பற்றி அறிய எங்கள் அதிகாரப்பூர்வ ஒளிவழிகளில் எங்களைப் பின்தொடரவும்!*

- ஏஸ் குழுமத்தின் ஃபேஸ்புக் பக்கம்
- ஏஸ் குழுமத்தின் டிக்டொக் ஒளிவழி
- மனிதவள அமைச்சின் யூடியூப் ஒளிவழி